OS 110/2018

வா.சா.4 லிங்கப்பன் த/பெ வேலு

நாள் 28.07.2025

**குறுக்கு விசாரணை**

1. நான் இதற்கு முன்பு எங்கு வேலை செய்தேன் என்றால் ஆரணி கூட்டுறவு இந்தியன் கேஸ் கம்பெனியில் வேலை பார்த்தேன். வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் கமல்நாதன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவரை எப்படி தெரியும் என்றால் கமல்நாதன் இந்தியன் கேஸ் நிறுவனத்தின் மேலாளர் அவரின் கீழ் நான் வேலை பார்த்தேன். அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் வா.சா.ஆ1ல் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். வாதி கருணாமூர்த்தியை எனக்கு 2006ம் ஆண்டில் இருந்து தெரியும் என்றால் தெரியும். பிரதிவாதியின் கணவர் கமல்நாதன் என்பவர் தான் வாதியிடம் கடன் வாங்கினார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் முதன்மை வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும் ரூபாய் வாங்கியது உண்மை தான்.

2. 2006ல் கமல்நாதன் தான் வாதி கருணாமூர்த்தியிடம் இருந்து ரூ.3லட்சம் கடன் வாங்கினார் என்றால் இந்துமதியிடம் இருந்து கமல்நாதனின் மனைவி அமுதா வாங்கினார். எந்த இடத்தில் வைத்து கடன் கொடுக்கப்பட்டது என்றால் ரிஜிஸ்டர் ஆபிசில் கொடுக்கப்பட்டது. கடன் கொடுத்த போது ரிஜிஸ்டர் ஆபிசிக்கு இந்துமதி வரவில்லை என்றால் வந்தார். நான் கமல்நாதன்க்கு கீழே வேலை பார்த்தேன் என்றாலும் கமல்நாதன் தான் மாதம் ரூ.10,000/- வட்டி கொடுப்பார் என்றாலும் சரியல்ல. நானே வட்டி பணத்தை கமல்நாதன் கொடுத்ததை வாதியிடம் கொடுத்திருக்கிறேன் என்றால் இல்லை. வா.சா.ஆ1ல் சாட்சி கையொப்பம் செய்த பிறகு வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடைய என்ன பரிமாற்றம் நடந்தது என்று எனக்கு தெரியாது. 2006ல் கருணாமூர்த்தி மற்றும் அவரது மகள் இந்துமதி என்ற விவரம் எனக்கு தெரியும். வாதி கருணாமூர்த்தி வேலூரில் கேஸ் அலுவலகம் வைத்திருக்கிறார் என்றால் சரிதான்.

3. 2017ல் வாதிக்கும் இந்துமதிக்கும் இடையே ஏற்பட்ட பணப்பரிமாற்றம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2006 முதல் 2017 வரை பிரதிவாதியும் அவரது கணவரும் வட்டி செலுத்தி வந்தார்கள் என்றாலும் அதனால் தான் 2018ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் கமல்நாதன் வாதியும் நல்ல பழக்கம் உடைய நபர்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.